**In the Court of the District Munsif, Eraniel**

**Original Suit No. 70/2022** **Date:18.06.2025**

**(P.W.1)- முத்துச்சாமி**

**1-**ஆம் பிரதிவாதி தரப்பு **குறுக்கு விசாரணை**

1. வழக்கு சொத்தின் விஸ்தீரணம் 1.25 சென்ட் என்றால் சரிதான். பட்டிகை சொத்தின் கிழக்கு பக்கம் 2-ஆம் பிரதிவாதியின் சொத்துள்ளது என்றால் சரிதான். மேற்கே 1-ஆம் பிரதிவாதியின் சொத்துள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கின் விவரங்களை வழக்கறிஞருக்கு நான்தான் சொல்லிக்கொடுத்தேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வாதுரையில் சொத்து விவரத்தில் சர்வே எண்-560/40 என்று குறிப்பிட்டுள்ளது ஆனால் சர்வே எண்-560/40 பொறுத்து பரிகாரம் ஏதும் கேட்கப்படவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ-1 ஆவணமான உயில் ஆவணப்படி 1-ஆம் பிரதிவாதிக்கு சர்வே எண் 560/14-ல் உள்ள சொத்து கிடைக்கப்பெற்றது என்றால் நினைவில்லை. மேற்படி வா.சா.ஆ-1 ஆவணப்படி 1-ஆம் பிரதிவாதிக்கு 11-வது இன சொத்து கிடைக்கப்பெற்றது என்றால் நினைவில்லை.

2. மேற்படி 11-வது இனச்சொத்தில் என் சொத்தின் மேற்கே 1-ஆம் பிரதிவாதியின் சொத்துள்ளது என்ற குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிராது சொத்து விவரத்தின் எல்கை விவரத்தில் மேற்கே குளத்தின் கரை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிராதில் எந்த சொத்தில் பரிகாரம் வேண்டும்என்பதையும் சொத்தின் எல்கையையும் சரியாக குறிப்பிடாததால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. சர்வே எண் 560/14 என்ற சொத்தைப் பொறுத்து 2-ஆம் பிரதிவாதி என்மீது அசல் வழக்கு எண் 231/2011 என்ற வழக்கு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி வழக்கு 2-ஆம் பிரவாதிக்கு சாதகமாக தீர்ப்பானது என்றால் சரிதான்.

**(P.W.1)- முத்துச்சாமி**

**1-**ஆம் பிரதிவாதி தரப்பு **குறுக்கு விசாரணை**

3. என் சொத்தின் கிழக்கு ஓரமாக எல்கை நிர்ணயிக்கப்படவேண்டும் என்றும் 2-ஆம் பிரதிவாதியின் மேற்கு எல்கையும் நிர்ணயிக்கப்படவேண்டும் என்று கேட்டு மேற்படி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.1-ஆம் பிரதிவாதியின் சொத்தின் மேற்கே குளம் அமைந்துள்ளது என்றால் சரிதான். என் சொத்திற்கும், 1-ஆம் பிரதிவாதியின் சொத்திற்கும் வடக்கே பொதுமக்கள் குளத்திற்கு சென்றுவர பாதை உள்ளது என்றால் சரிதான். நான் இவ்வழக்கு தாக்கல் செய்யும்போது என் சொத்திற்கு வடக்கே ரோடு இருப்பதாக குறிப்பிடப்படவில்லை என்றால் நினைவில்லை. வழிப்பாதைக்கு வடக்கே தங்கப்பன் என்பவரின் சொத்து அமைந்துள்ளது என்றால் சரிதான். என் சொத்திலோ, 1-ஆம் பிரதிவாதியின் சொத்திலோ வழிப்பாதை வேண்டி நிலம் எடுக்கப்பட்டுள்ளதா என்றால் சரிதான்.

4. வழிப்பாதைக்கு நிலம் எடுத்தபின்பு எனக்கும், 1-ஆம் பிரதிவாதிக்கும் எவ்வளவு சொத்து உள்ளது என்று என்னால் கூற இயலாது என்றால் சரிதான். உயில் இயற்றியபின் சர்வே எண் 560/14-ல் உள்ள 2.5 சென்ட் சொத்தில் எனக்கும், 1-ஆம் பிரதிவாதிக்கும் சரிபாதி பங்குள்ளது என்றால் சரிதான். எனவே, வழிப்பாதை எடுத்த நிலம்போக உள்ள இடத்தில் எனக்கும், 1-ஆம் பிரதிவாதிக்கும் சரிபாதி பங்கு என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வாதுரையில் 2.5 சென்டில் வழிப்பாதைக்காக எவ்வளவு இடம் எடுக்கப்பட்டது என்றும் மீதம் எவ்வளவு இடம் உள்ளது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் 10.10.2022 அன்று நான் எல்கையை நிர்ணயிக்க நில அளவையருடன் சென்றதாகவும் அதை 1,2 பிரதிவாதிகள் தடுத்ததால் 12.10.2022 அன்று அவர்கள்மீது புகார் அளித்தேன் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் 15.09.2022 அன்று பிரதிவாதிகள் வழக்கு சொத்தின் எல்கை கற்களை அகற்றிவிட்டனர் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

**(P.W.1)- முத்துச்சாமி**

**1-**ஆம் பிரதிவாதி தரப்பு **குறுக்கு விசாரணை**

5. வா.சா.ஆ.4 புகார் மனுவில் எந்த தேதியில் பிரதிவாதிகள் எல்கை கற்களை அகற்றினார்கள் என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் நினைவில்லை. வா.சா.ஆ.4 புகாரில் 10.10.2022 காலை 9 மணி அளவில் பிரதிவாதிகள் எல்கை கற்களை அகற்றினார்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என் வழக்குப்படி பிரதிவாதிகள் ஒருநாளில் எல்கை கற்களை அகற்றியதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் பிரதிவாதிகள் எல்கை கற்கைளை அகற்றியதாக பொய்யாக கூறியுள்ளதால் வேறுபட்ட தேதிகளை குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் அது வழக்கு மூலத்திற்காக பொய்யாக உருவாக்கப்பட்ட சங்கதி என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.4 புகாரில் குறிப்பிடப்பட்ட தேதியும் வாதுரையில் உள்ள வழக்கு மூல தேதியும் வேறுபட்டுள்ளதால் இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கான வழக்கு மூலம் ஏதும் எழவில்லை என்பதால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

6. 1-ஆம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பதிலுரையை நான் படித்துப்பார்த்தேனா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி பதிலுரையில் 1-ஆம் பிரதிவாதி 2.5 சென்ட் சொத்தில் பாதைக்கு போக மீதி நிலம் கையுருப்பில் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்தை நீதிமன்ற ஆணையர் மூலம் அளவீடு செய்ய நான் தயாராக உள்ளேன் என்றால் தயாராக உள்ளேன். 1-ஆம் பிரதிவாதி சொத்தை அபகரிக்க வேண்டி பொய்யான சங்கதிகளை கூறி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சர்வே எண் 560/14-ல் என் அம்மா எங்களுக்கு ஒதுக்கிய 2.5 சென்டில் வழிப்பாதைக்கு போக மீதமுள்ள சொத்தில் பாதி சொத்து 1-ஆம் பிரதிவாதிக்குரிமைப்பட்டது என்றால் எனக்கும், 1-ஆம் பிரதிவாதிக்கும் சரி பங்குள்ளது.

(ஒப்பம்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
இரணியல்